## கொழும்புப் பல்கலைக்கழகம் - கலைபீடம்

## முதலாம் வருட கலைமாணிப் பரீட்சை
## இரண்டாம் பருவப் இறுதிப் பரீட்சை 2016/17

## DMG / FND 1202 :தரவுப்பகுப்பாய்விற்கானஓர் அறிமுகம்

நேரம்:இரண்டு (02) மணித்தியாலங்கள்

**மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக
**இவ்வினாத்தாலானது (02) பக்கங்கள் மற்றும் ஐந்து (05) வினாக்களை கொண்டது.**
**கணிப்பொறி பயன்படுத்தப்படலாம்**

---

01. (i) தரவுகள் தவறாகப் பிரயோகிக்கப்படும் வழிகளை பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) சமூகவிஞ்ஞான கற்கைகளில் தரவுப்பிரயோகத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

02. (i) தரவுகளை முன்வைக்கும் பொழுது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய காரணிகளை, உதாரணங்களுடன் ஆராய்க.

(05 புள்ளிகள்)

(ii) சமூக விஞ்ஞான ஆய்வுகளில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுப் பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

03. **X** எனும் பிரதேசத்தில் பாடசாலைப் பருவ பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்களுள் அதிகமானவர்கள், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக இடம்பெயர்வதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த தாய்மார்களின் இடப்பெயர்வினால், அவர்களின் பாடசாலை செல்லும் வயதினையுடைய பிள்ளைகளுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டியதன் தேவை உமக்குள்ளதாக கருத்திற் கொள்க.

(i) உங்கள் கருத்துப்படி, இந்த ஆய்வுக்காக தரவுகளை சேகரிக்க மிகவும் பொருத்தமான முறை / முறைகளைக் குறிப்பிட்டு, அந்த முறை / முறைகளைத் தெரிவு செய்வதற்கான காரணங்களைத் தருக.

(10 புள்ளிகள்)

(ii) தெரிவு செய்யப்பட்ட தரவு சேகரிக்கும் முறை / முறைகளைப் பயன்படுத்தி, நீங்கள் எவ்வாறன தகவல்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றீர்கள் என்பதனை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

4. A என்ற கம்பனி ஊழியர்களின் நாளாந்த ஊதியம் கீழே தரப்பட்டுள்ளது.

| நாளாந்தஊதியம்(ரூபா) | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3,000-4,000 | 10 |
| 4,000-5,000 | 16 |
| 5,000-6,000 | 13 |
| 6,000-7,000 | 25 |
| 7,000-8,000 | 10 |
| 8,000-9,000 | 06 |

(i) மேற்குறிப்பிட்ட தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் அளவீடுகளை கணிக்குக

(அ) ஆகாரம்
(ஆ) இடையம்
(இ) இடை
(ஈ) மேலே பெற்றுக் கொண்ட விடைகள் தொடர்பாக விவரணம் செய்க.

(15 புள்ளிகள்)

(i) தரவுப்பகுப்பாய்வில் நியமவிலகளின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

5. (i) ஆய்வொன்றில் தரவுசேகரிப்பிலிருந்து ஆய்வறிக்கையினைத் தயார் செய்யும் வரையிலான செய்முறையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஆய்வறிக்கையொன்றினைத் தயாரிப்பதற்குப் பின்பற்றப்படக்கூடிய படிமுறைகளை விளக்குக.

(10 புள்ளிகள்)